# இயல் - 1
# ஆய்வு அறிமுகம்

வருங்காலத்திற்கென்று இலக்கியமாக, சமயமாக, அறநெறியாக, பிற அறிவுத் துறைகளாக முந்தைய தலைமுறை விட்டுச்சென்ற அனுபவத் திரட்டைத்தான் 'மரபு' என்கிறோம். மரபுக் கவிதைகள் பலகாலமாக அமைந்துள்ளன. இன்றைய நிலையில் இந்த மரபுக் கவிதைகளை விட, புதுக்கவிதைகளே பலருக்குள்ளும் பல படைப்புகளைப் படைக்க வேண்டும் என்ற எண்ணத்தைத் தூண்டுகின்றன. இன்றைக்கான பார்வை கைவரப்பெறுவதற்கு கவிஞன் முதலில் தம் சமகால வாழ்வைக் கண் திறந்து பார்க்க வேண்டியிருக்கிறது. கடந்த காலத்தில் வட்டமிடும் மனத்தை நிகழ்காலத்தில் கொண்டு வந்து நிறுத்த வேண்டியிருக்கிறது.

புதுக்கவிதையில் மக்களது எதிர்பார்ப்பிற்குத் தகுந்தாற் போலவும் 'புது' என்ற சொல்லுக்கு ஏற்றாற் போலவும் கவிஞர்கள் செயல்பட வேண்டிய நிலை உள்ளது. நிகழ்காலத்தைப் புதுக்கவிதைகள் பிரதிபலிப்பதனால் மக்கள் அனைவரும் விரும்பும் வகையில் இவை அமைந்துள்ளன. கவிதையாக்கம் செய்யும் கவிஞன், கவிதையில் தன்னுடைய மனப்போக்கை வெளிப்படுத்துகின்றான்.

கவிதை மிகப் பழமையானது. உலகளாவியது. தமிழ் இலக்கிய வரலாற்றுப் பரப்பில் எண்ணற்ற இலக்கிய வகைகள் இருந்த போதும் கவிதை இலக்கியத்தின் களம் பரந்துபட்டது. தமிழ்க் கவிதையின் புதிய போக்கும் வளர்ச்சியும் இன்று பெரும் மாற்றத்தைக் கண்டுகொண்டிருக்கின்றது.

மனித வாழ்க்கையோடு ஒருங்கிணைந்தது புதுக்கவிதை. அது மானுடத்தைப் பாடுவது. மனிதப் பண்பைச் சித்திரிப்பது. மனித வாழ்வில் நிகழும் சிறந்த சூழல்களையும் உயரிய மன உணர்வுகளையும் உரிய பொருளாக்கிப் பாடுவது. சிறந்த கவிதை வாழ்விலிருந்து நேரே முகிழ்க்கின்றது. எனவே அதில் மனிதப் பண்புகள்

ஆழமாகப் பதிந்துள்ளன. இவை கவிதையின் ஆற்றலை வெளிப்படுத்துவதன் மூலம் கவிஞனின் ஆளுமையை வெளிப்படுத்துகின்றன.

இதன் அடிப்படையில் கவிஞர் பாலாவின் படைப்புகளையும், படைப்பின் வழி வெளிப்படும் அவரது ஆளுமைத் திறன்களையும் ஆய்வதாக இவ்வாய்வேடு அமைந்துள்ளது.

### 1.0 ஆய்வுத்தலைப்பு

'கவிஞர் பாலாவின் படைப்பும் ஆளுமையும்' என்னும் தலைப்பில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

### 1.1 ஆய்வு நோக்கம்

தமிழில் காலந்தோறும் தோன்றிய இலக்கியங்களின் வகைகளும் வடிவங்களும் மாறியே வந்துள்ளன. சங்கப் பாடல்கள் ஆசிரியப்பாக்கள் என்றால் பிற்காலக் காப்பியங்கள் விருத்தப்பாக்களாகும். ஆழ்வார்களும், அடியார்களும் பக்திப் பெருக்கில் விருத்தங்களையே போற்றினர். பொருள் புதிதாய் சொல் புதிதாய் நவகவி பாடத்துணிந்த பாரதியும் மரபுக் கவிதைகளுடன் மேனாட்டுத் தாக்கத்தால் வசன கவிதைகளை இயற்றினார். யாப்பின்றிப் பாடினால் கவிதையாகாது எனக் கூறிய மரபை முறித்து உரை வீச்சுக்களாகிய விடுதலைப்பாக்கள் தமிழில் எழுந்தன. அமெரிக்கக் கவிஞன் விட்மனின் 'புல்லின் இதழ்கள்', இங்கிலாந்துக் கவிஞர் டி.எஸ். இலியட்டின் 'பாழ்நிலம்' ஆகியவற்றைப் படித்த ந.பிச்சமூர்த்தி தமிழில் இவ்வகை புதுமை விளைவிக்கக் கருதி 1950இல் புதுக்கவிதை வகையினை அறிமுகம் செய்தார். கு.ப. ராஜகோபாலன், புதுமைப்பித்தன், வல்லிக்கண்ணன் போன்றோர் அப்புதுக்கவிதைக்கு மணிக்கொடி நாட்டினர்.

கோவையில் வானம்பாடியினர் 1970இல் புதுக்குரல் எழுப்பினர். புதிய மக்களாட்சி முறையே கவிதை என முழங்கினார் மு.மேத்தா. சிற்பியோ 'சர்ப்பயாகம்' செய்தார். சமுதாய நோக்கினை அடித்தளமாக அமைத்து உணர்ச்சி மற்றும்

கற்பனைகளின் பிரதிபலிப்பாக இலட்சியக் கவிஞர்கள் பலர் தமிழில் புதுக்கவிதை படைத்தனர்.

இந்த கவிதைச் சூழலில் வானம் பாடி பரம்பரையில் கவிஞர் பாலா இணைந்து தமது பங்களிப்பைத் தந்தார். இவர் ஆங்கிலப் பேராசிரியர், கவிஞர், திறனாய்வாளர், மொழிபெயர்ப்பாளர், விமர்சகர் எனப் பன்முகப் படைப்பாளர் ஆவார். அவர்தம் படைப்புகள் வழிப் படைப்பாற்றலையும் ஆளுமைத் திறத்தையும் ஆய்வு செய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

### 1.2 ஆய்வின் கருதுகோள்

ஆளுமை என்பது புறத்தோற்றம் மட்டுமன்று. ஒருவரின் நல்ல குணங்கள் அடுத்தவர் மனதில் முக்கிய இடம்பெறின் ஆளுமையாக வெளிப்படும். நல்ல பண்புகளை வளர்த்துக் கொள்ளும் மனப்பான்மையே ஆளுமையாகும். கவிஞர் பாலா சாதகமான சூழ்நிலைகளைத் தம் அறிவாலும், மதிநுட்பத்தாலும், கவிதைப் படைப்பின் வழி ஆளுமையை வளர்த்துக் கொண்டவர் என்பதை இவ்வாய்வு கருதுகோளாகக் கொள்கின்றது.

### 1.3 ஆய்வு முன்னோடிகள்

இவ்வாய்வுக்குரிய முன்னோடிகளாக படைப்பு, ஆளுமை குறித்த ஆய்வுகள் போன்றன இந்த ஆய்வின் முன்னோடிகளாகும்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் ‘கவிஞர் மீராவின் படைப்பும் ஆளுமையும்’ என்னும் தலைப்பில் ச.மணிமேகலை செய்துள்ள முனைவர் பட்ட ஆய்வும், ‘கவிஞர் தாராபாரதியின் படைப்பும் ஆளுமையும்’ என்ற தலைப்பில் மு.ருக்மணி செய்துள்ள முனைவர் பட்ட ஆய்வும், ‘கண்ணதாசனின் ஆளுமைத்திறன்’ என்ற தலைப்பில் ம.செந்தில்குமார் செய்துள்ள முனைவர் பட்ட ஆய்வும், ‘வாலியின் படைப்பும் ஆளுமையும்’ என்ற தலைப்பில் த.பாலாஜி செய்துள்ள முனைவர் பட்ட ஆய்வும், ‘பாலா கவிதைகளில் சமுதாயப் பார்வை’ என்ற தலைப்பில்

அசுந்தாராணி செய்துள்ள ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வும் இந்த ஆய்வின் முன்னோடிகளாகும்.

**1.4 முதன்மை ஆதாரங்கள்**

கவிஞர் பாலாவின் படைப்புலகம் கவிதை, கட்டுரை, திறனாய்வு, மொழிபெயர்ப்பு என்ற பல்வேறு தளங்களில் பரந்துபட்டது. அவரது படைப்புகளில் புதுக்கவிதை ஒரு புதுப்பார்வை, திண்ணைகளும் வரவேற்பறைகளும், நினைவில் தப்பிய முகம், வித்யாபதியின் காதற்கவிதைகள், சர்ரியலிசம், கவிதைப்பக்கம், இன்னொரு மனிதர்கள், முன்னுரையும் பின்னுரையும், கவிதை ஒரு கலந்துரையாடல், தமிழ் இலக்கிய விமர்சகர்கள், தமிழ் நவீனத்துவத்தின் முன்னோடிகள், கதவு அருகே சொற்கள் ஆகிய நூல்கள் மட்டும் முதன்மை ஆதாரங்களாக எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

**1.5 துணைமை ஆதாரங்கள்**

படைப்பு, ஆளுமை குறித்த ஆய்வுகளும், நூல்களும், கவிதைகளும், கட்டுரைகளும், பாலாவின் பிற நூல்களும் மற்றும் இதழ்களும் துணைமை ஆதாரங்களாக அமைகின்றன.

**1.6 ஆய்வு எல்லை**

கவிஞர் பாலாவின் தனித்துவமிக்க ஆளுமைப் பண்புகள் கண்டறிய இருப்பதால் அவருடைய பன்னிரண்டு படைப்புகள் மட்டுமே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

**1.7 ஆய்வு அணுகுமுறை**

கவிஞர் பாலாவின் படைப்பிலக்கியங்களில் படைப்பும் ஆளுமையும் என்ற இரு நிலைகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்விரு நிலைகளும் விளக்கப்படுவதால் விளக்க முறை ஆய்வும், படைப்புகள் ஒவ்வொன்றும் பகுத்துக் காணப்படுவதால் பகுப்பாய்வு முறையும், படைப்புகளைத் தொகுத்துக் காணும்

நிலையில் தொகுப்புமுறை ஆய்வும், இதன் மூலம் வெளிப்படும் பாலாவின் ஆளுமைத் திறனை அறிந்து கொள்வதற்கு உளவியல் முறை ஆய்வும் இவ்வாய்வில் மேற்கொள்ளப்படுள்ளன.

### 1.8 ஆய்வேட்டின் அமைப்பு

"கவிஞர் பாலாவின் படைப்பும் ஆளுமையும்" என்னும் தலைப்பில் அமைந்த இவ்வாய்வேடு ஏழு இயல்களைக் கொண்டு அமைந்துள்ளது.

1. **ஆய்வு அறிமுகம்**
2. **பாலா - வாழ்வும் படைப்பும்**
3. **ஆளுமை**
4. **கவிதை**
5. **திறனாய்வு**
6. **மொழி பெயர்ப்பு**
7. **ஆய்வு நிறைவுரை**

இவை தவிர இவ்வாய்விற்குத் துணைபுரிந்த நூல்கள், ஆய்வேடுகள், இதழ்கள் முதலானவற்றை அகர வரிசைப்படி தொகுத்து துணைநூற் பட்டியலாகத் தரப்பெற்றிருக்கிறது. இறுதியாகப் பின்னிணைப்புகள் தரப்பெற்றிருக்கின்றன.

#### 1.8.1 இயல் 1 : ஆய்வு அறிமுகம்

இப்பகுதியில் ஆய்வுத் தலைப்பு, ஆய்வு நோக்கம், ஆய்வின் கருதுகோள், ஆய்வு முன்னோடிகள், ஆய்வுச்சான்றாதாரங்கள், ஆய்வு எல்லை, ஆய்வு அணுகுமுறை, ஆய்வேட்டின் அமைப்பு ஆகியன விளக்கப்பட்டிருக்கின்றன.

#### 1.8.2 இயல் 2 : பாலா - வாழ்வும் படைப்பும்

'பாலா - வாழ்வும் படைப்பும்' எனும் இரண்டாம் இயல் கவிஞரின் பிறப்பு, கல்வி, பணி, இல்லறவாழ்க்கை, படைப்பாளுமை, புத்தகப்படைப்புகள், வானம்பாடிக் கவிஞர்,

கவிதைக் கொள்கை, திறனாய்வாளர், மொழிபெயர்ப்பாளர், சொற்பொழிவாளர், சிற்றிதழ் பற்றாளர், சாகித்ய அகாதெமி ஒருங்கிணைப்பாளர், கவிஞர் பெற்ற விருதுகள், பாராட்டுகள் போன்றவற்றை விளக்குவதாக அமைந்துள்ளது.

### 1.8.3 இயல் 3 : ஆளுமை

இவ்வியலில் ஆளுமை விளக்கம், ஆளுமை பற்றிய மேனாநாட்டறிஞர்களின் கருத்துகள், ஆளுமையின் மாறும் தன்மை, ஆளுமை பற்றிய உளப்பகுப்பாய்வாளர்களின் கருத்தியல்கள், பாலுணர்வு வளர்ச்சிப் படிநிலைகள், ஆளுமைக் கோட்பாடுகள், ஆளுமையின் வகைகள், ஆளுமைப் பண்புக் கூறுகள், ஆளுமைக் காரணிகள், ஆளுமையை அளவிடும் முறைகள் ஆகியவற்றின் விளக்கம் இவ்வியலில் இடம் பெற்றுள்ளது.

### 1.8.4 இயல் 4 : கவிதை

இவ்வியலில் கவிதைக் கருத்தியல், கவிதை ஆற்றல், கவிதைக் கோட்பாடு, கவிதை ஒரு கலந்துரையாடல், கவிதை குறித்த பாலாவின் பார்வை, பாலாவின் கவிதை வெளிப்பாடு, கவிதையும் ஆளுமையும், புலப்பாட்டுத்திறன், மரபுக்கவிஞர், பேச்சுத்தான் கவிதை, அணியின்பம், இலக்கிய ஆளுமை, அழகியல் பார்வை, சமூகப் பார்வை, அரசியல் பார்வை, புதுப்பார்வை, கவிதைஉத்திகள் ஆகியவற்றின் ஆளுமை விளக்கப்பட்டுள்ளது.

### 1.8.5 இயல் 5 : திறனாய்வு

இவ்வியலில் திறனாய்வுப் போக்குகள், தமிழ்த் திறனாய்வியல், மேலை இலக்கியத் திறனாய்வியல், வாசிப்போன் அனுபவத் திறனாய்வு, திறனாய்வாளர் பாலா, திறனாய்வு குறித்த கருத்தியல்கள், புதுக்கவிதை ஒரு புதுப்பார்வை, புதுப்பார்வை குறித்த கருத்தியல்கள், புதிய நோக்கில் புதுக்கவிதை, கவிதையில் புதிய பரிமாணம், சர்ரியலிசம், சர்ரியலிசம் பற்றிய விளக்கம், கவிஞர் பாலாவின் சர்ரியலிசம், முன்னோடிகள், பாலாவின் சர்ரியலிசம் குறித்த கருத்தியல்கள்,

கவிதைப் போக்குகள், கவிதையும் வாழ்வியல் மதிப்பீடுகளும், தமிழ் இலக்கிய விமர்சகர்கள், விமர்சகர் பாலா, சுவடு இதழ் விமர்சகர்கள், பாலாவின் பார்வையில் விமர்சகர்கள், படைப்பும் பார்வையும், தமிழ் நவீனத்துவத்தின் முன்னோடிகள், கருத்தியல்கள், வாழ்வியல் நெறி, மாற்றங்களின் காலம், படைப்பியல், செவ்வி, முன்னுரையும் பின்னுரையும், ஆய்வியல் நோக்கில் முன்னுரை, பெண்ணியப் பார்வை, விசாலப் பார்வை, யதார்த்த நிலை போன்றவை விளக்கப்பட்டுள்ளது.

### 1.8.6 இயல் 6 : மொழிபெயர்ப்பு

இவ்வியலில் மொழிபெயர்ப்பும் ஊடகங்களே, மொழிபெயர்ப்பு விளக்கம், மொழி பெயர்ப்புக்கோட்பாடுகள், மொழிபெயர்ப்பின் வகைகள், மொழிபெயர்ப்பாளனுக்கு வேண்டிய அடிப்படைச் செய்திகள், தமிழில் மொழி பெயர்ப்புக் கோட்பாடுகள், முதல் கவிதை மொழி பெயர்ப்பு, வடமொழி பக்தி இலக்கியப் போக்கு, வித்யாபதியின் காதற்கவிதைகள், வைணவ மரபு, ஜெயதேவரின் வித்யாபதி, பாரதியும் வித்யாபதியும், முல்லை நிலக்காட்சி, பொன்னழகு, இன்பப்போர், பாலாவின் வித்யாபதி, ஒலிநயம், பிற மொழிபெயர்ப்புகள் போன்றவை விளக்கப்பட்டுள்ளது.

### 1.8.7 இயல் 7: ஆய்வு நிறைவுரை

ஆய்வு நிறைவுரையில் மேற்கூறிய இயல்களில் கண்டறியப்பட்ட கருத்துகளின் வழி கிடைத்த ஆய்வு முடிவுகள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

## 1.9 துணை நூற்பட்டியல்

ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்ட நூல்கள், ஆய்வேடுகள், ஆய்வுக் கட்டுரைகள் போன்றவை துணை நூற்பட்டியல் என்னும் தலைப்பின் கீழ் தரப்பட்டுள்ளன.

## 1.10 பின்னிணைப்பு

கவிஞர் பாலாவின் மணிவிழா மலர் புகைப்படங்களும், 'ஆனந்த ஜோதி' இதழில் 'கவிஞர் பாலாவின் சுவடுகள்' என்ற தலைப்பில் வெளிவந்த கட்டுரையும் பின்னிணைப்பில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.